5—

மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி செயல்படாமல் உள்ளது.

*10382— திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ள ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக் கருவியை இயக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்ள கருவி பழுது ஏதும் இல்லாமல் செயல்படும் நிலையில் உள்ளது.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி இருதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு இருதயத்தையும் அதைச் சுற்றியுள்ள இரத்தக் குழாயையும் சோதிப்பதற்காகப் பயன்பட்டு வருகிறது. சில காலமாக அது இயங்குவதற்கு அந்த மருத்துவர்கள் பயிற்சியில்லாத காரணத்தாலே அது பழுதுபட்டு இருந்தது. இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள், அது நன்றாக, சரியாகச் செயல்படுகிறது என்று சொல்வதைக்கேட்டு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் அந்தக் கருவிகளை இயக்க அவர்களுக்குச் சரியான பயிற்சி இல்லாத காரணத்தினால் அடிக்கடி அவை செயல்படாத நிலைமை ஏற்படுகிறது மருத்துவர்கள் அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்த அவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு முன்வருமா, எங்கே பயிற்சி அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பயிற்சி பெற்றவர்கள் தற்போது இருக்கிறார்கள். ஏற்கனவே அந்தத் துறையிலே மட்டும்

1993 அக்டோபர் 26]

இதுபோல கருவிகள் நான்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் இவற்றோடு உபகருவிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன அங்கே மொத்தமாக 'இன்-பேஷன்ட்'-ஆக கடந்த ஆண்டு மட்டும் 1,224 பேர் பயனடைந்திருக்கிறார்கள். 'அவுட்-பேஷன்ட்'-ஆக ஏறத்தாழ 19,331 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட கருவியிலே மட்டும் 244 பேர் பயனடைந்திருக்கிறார்கள். எனவே அங்கே பயிற்சி பெற்றவர்கள் இருந்து அந்தக் கருவிகளை ஒழுங்காக இயக்கி வருகிறார்கள்; அங்கே தொய்வு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆஞ்சியோ கார்டியோகிராம்' நல்ல முறையிலே செயல்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், 'கார்டியோகிராம் கத்தீட்டர்' மற்றும் 'கார்டியோகிராம் கேஸட்' போன்றவை அங்கு இல்லாததினால் அந்தக் கருவி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதுமட்டுமல்ல; தமிழகத்திலேயே நவீனமயமான இந்த 'ஆஞ்சியோ கார்டியோகிராம்' மதுரையிலேதான் இயங்குகிறது. அவ்வாறு விலையுயர்ந்த 'ஆஞ்சியோ கார்டியோகிராம்' இருந்தும்கூட 'கார்டியாலஜிஸ்ட்' திறமையாக கருவிகளைப் பயன்படுத்தாதக் காரணத்தினால் அக்கருவிகள் உள்ள இடத்திற்கு திறமையான 'கார்டியாலஜிஸ்ட்' ஒருவரை அனுப்பி அக்கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் ஏற்கெனவே சொன்னேன். அங்கே இருப்பவர்கள் முறையாக பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் இருந்துதான் அத்தனை நோயாளிகளுக்கும் அங்கே அவர்கள் 'ட்ரீட்மென்ட்' கொடுத்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தேவையான உபகருவிகள் வாங்குவதிலே பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. நேற்று கூட தொலைபேசியிலே அங்கே இருக்கிற மருத்துவர்களைத் தொடர்புகொண்டு நான் கேட்டபோது அவர்களுக்குத் தேவையான அத்தனையும் அவர்களிடத்தில் இருப்பதாகவும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்தார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் முடிந்து போகிறபோது வேண்டுமானால் போய் பார்த்துவிட்டு நிலைமையை என்னிடம் தெரிவித்தால் சிறப்பாக இருக்கும்.

[1993 அக்டோபர் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6 திரு. ஆர். பி. பரமசிவம், திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

தமிழ்நாட்டில் இயற்கை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துதல்.

*17447—திரு. ஆர். பி. பரமசிவம் :
திரு. கா. பூ. முனுசாமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு இயற்கை மருத்துவக் கல்லூரி (N turop thy Collage) (5 வருடப் படிப்பு) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) தமிழ்நாட்டில் இயற்கை நல மருத்துவர்களை (N turopthy Doctors) ஊக்குவிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இயற்கை முறைப் பிரிவுகளைச் செயல்படுத்த ரூ. 32.22 இலட்சம் செலவிட வழிவகை செய்யப் பட்டுள்ளது.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘உணவே மருந்து, மருந்தே உணவு’ என்னும் கோட்பாட்டின் அடிப்படையில், இயற்கை முறை மருத்துவத்தின் மூலம், அதாவது பழங்கள், பச்சைக் காய்கறிகள், இலைச் சாறுகள் ஆகிய இயற்கை உணவுகளின் மூலமும், வாழையிலைக் குளியல், மண் குளியல் மூலமும் பெரும்பாலான வியாதிகளை நீக்க முடியும் என்று நிரூபித்து வருகிறார்கள். இன்றுகூட, சென்னையிலும் மற்றும் கோவையிலும் தனியார் இயற்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS